


#StayAware #StaySafe

இந்திய ரிசர்வ் வங்கியோ அல்லது எந்தவொரு நிறுவனத்திடமிருந்தோ பெருந்தொகையை (லாட்டரி / வரி திருப்பியளித்தல் போன்றவை) நீங்கள் பெற இருப்பதாக தகவல் வந்தால், நம்ப வேண்டாம். தொகையைப் பெற, உங்கள் வங்கிக் கணக்கு விவரங்களைப் பகிரவோ அல்லது கட்டணம் செலுத்தவோ வேண்டாம். அத்தகைய செய்திகளை புறக்கணிக்கவும்.

**ஆர்பிஐ சொல்கிறது – விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.**

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**



உங்கள் OTP, PIN எண், அட்டை விவரங்களை யாருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். மோசடி செய்பவர்கள் KYC புதுப்பிப்பதற்கு அல்லது வேறு சில காரணங்களுக்காக இந்த விவரங்களை உங்களிடம் கேட்கலாம். அவர்கள் உங்களுக்கு ஒரு இணைப்பை அனுப்புவதன் மூலமோ அல்லது வங்கி அல்லது இந்திய ரிசர்வ் வங்கியின் பணியாளராக காட்டிக்கொள்வதன் மூலமோ உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பெற்று உங்கள் கணக்கிலிருந்து பணத்தை எடுக்கலாம். எனவே கவனமாக இருங்கள் மற்றும் மோசடியிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**

மோசடிகளால் ஏற்படும் இழப்புகளைத் தவிர்க்க / குறைக்க உங்கள் அட்டையில் சர்வதேச மற்றும் உள்நாட்டு பரிவர்த்தனைகளுக்கான பயன்பாட்டு வரம்புகளை நிர்ணயிக்கவும். ஆன்லைன் மற்றும் வணிக பரிவர்த்தனைகளுக்கு தினசரி வரம்புகளை நீங்கள் நிர்ணயிக்கலாம். இந்த வசதிகளை மொபைல் செயலி, இணைய வங்கி அல்லது ஏடிஎம் மூலம் செயல் படுத்தலாம் அல்லது செயல் படுத்தாமல் இருக்கலாம், மேலும் அவை உங்கள் வரவு மற்றும் செலவு இரண்டையும் வைத்திருப்பதில் திறனுள்ளதாக இருக்கும்.

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

RBI Kehta Hai...
Jaankaar Baniye,
Satark Rahiye!




உங்கள் வங்கி கணக்கு மற்றும் லாக்கருக்கு நீங்கள் ஒரு வாரிசுதாரரை பதிவு செய்ய வேண்டும். வாரிசு நியமனம் வைப்புதாரரின் மரணத்திற்குப் பிறகு உரிமைகோரல்களை எளிதில் தீர்க்க உதவுகிறது.
ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.
RBI Kehta Hai...
Jaankaar Baniye,
Satark Rahiye!



உங்களுக்கு தேவைப்படாத, உங்களால் கோரப்படாத மற்றும் உங்களுடன் பகிரப்படாத விதிமுறைகளோடு உங்களுக்கு ஒரு காப்பீட்டு பாலிஸி அல்லது வேறு எந்த நிதி சேவையும் வழங்கப்பட்டால், உங்கள் வங்கியில் புகார் அளிக்கவும். தயங்க வேண்டாம். வங்கியின் பதிலில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால், ஆர்பிஐ குறை தீர்ப்பாளர்க்கு எழுதலாம் அல்லது ஆர்பிஐ யின் புகார் மேலாண்மை அமைப்பு (சிஎம்எஸ்) போர்ட்டலில் புகார் செய்யலாம்.

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**

உங்கள் வங்கி, என்.பி.எஃப்.சி அல்லது பணபரிவர்த்தனை பங்கேற்பாளர் (ஈ- வாலட் வழங்குபவர்) ஒரு மாதத்திற்கும் மேலாக உங்கள் புகாரை தீர்க்கவில்லை அல்லது அவர்களின் பதிலில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால், புகார் மேலாண்மை அமைப்பின் (சிஎம்எஸ் போர்ட்டல்) மூலம் இந்திய ரிசர்வ் வங்கியின் குறை தீர்ப்பாளரிடம் புகார் அளிக்கலாம்.

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.



**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**




உங்கள் ஏடிஎம் பரிவர்த்தனை தோல்வியுற்றால் மற்றும் உங்கள் வங்கி உங்கள் கணக்கிலிருந்து டெபிட் செய்யப்பட்ட பணத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பித்தரவில்லை என்றால், வங்கி உங்களுக்கு ஈடுசெய்ய வேண்டும்.

வங்கி உங்களுக்கு அத்தகைய இழப்பீட்டை தானாக வழங்கவில்லை என்றால், புகார் மேலாண்மை அமைப்பில் (சிஎம்எஸ் போர்ட்டல்) ஆர்பிஐ யின் வங்கி குறைதீர்ப்பாளரிடம் புகார் செய்யலாம்.

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**


உங்கள் கணக்கு தொடர்பான பரிவர்த்தனைகள் குறித்த உடனடி விழிப்பூட்டல்களைப் பெற உங்கள் மொபைல் எண் மற்றும் மின்னஞ்சலை உங்கள் வங்கியில் பதிவு செய்யுங்கள். நீங்கள் செய்யாத அல்லது அங்கீகரிக்கப்படாத எந்தவொரு பரிவர்த்தனை பற்றியும் உங்களுக்கு எச்சரிக்கை வந்தால், உடனடியாக உங்கள் வங்கிக்கு தெரிவிக்கவும்
ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.
RBI Kehta Hai...
Jaankaar Baniye,
Satark Rahiye!



ஆன்லைனில் வங்கிச்சேவை இயக்கும்போது நீங்கள் முன்னெச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, உங்கள் மொபைல் போன், மின்னஞ்சல் அல்லது பணப்பையில் முக்கியமான வங்கித் தகவல்களை வைக்க வேண்டாம்.

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**




ஆன்லைன் வங்கி சேவைக்கு, சரிபார்க்கப்பட்ட, நம்பகமான மற்றும் பாதுகாப்பான (அதாவது https :) வலைத்தளங்களை மட்டுமே பயன்படுத்தவும். உங்கள் வங்கி பரிவர்த்தனைகளுக்கு பொதுவான, திறந்த மற்றும் இலவச நெட்வொர்க்கைப் பயன்படுத்த வேண்டாம்.

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**



உங்கள் OTP / CVV / ATM PIN நம்பரை யாருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உங்கள் ஆன்லைன் வங்கி கடவுச்சொல் மற்றும் பின் நம்பர் ஆகியவற்றை அவ்வப்போது மாற்றவும். உங்கள் ஏடிஎம் அட்டை, கிரெடிட் கார்டு அல்லது ப்ரீபெய்ட் கார்டை இழந்தால், உடனடியாக அதன் பயன்பாட்டைத் தடுக்கவும்.

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**



உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து யாரோ ஒருவர் மோசடி செய்திருப்பதை நீங்கள் கண்டறிந்தால், உடனடியாக உங்கள் வங்கிக்குத் தெரிவிக்கவும். நீங்கள் வங்கிக்குத் தெரிவிக்கும்போது, ஒப்புதல் பெற்றுக்கொள்ளுங்கள். புகாரளித்த 90 நாட்களுக்குள் வங்கி உங்கள் புகாரைத் தீர்க்க வேண்டும்

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.


**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**



உங்கள் அலட்சியம் காரணமாக அதாவது, உங்கள் கடவுச்சொல், பின் நம்பர் அல்லது ஓடிபி ஆகியவற்றைப் பகிர்ந்து ,அதன் காரணமாக ஏதேனும் மோசடி நிகழ்கந்திருந்தால், நீங்கள் வங்கிக்குத் தெரிவிக்கும் வரை இழப்பு உங்களுடையதாகும். புகாரளித்த பின்னர் ஏதேனும் இழப்பு ஏற்பட்டால், வங்கி அதை ஈடுசெய்ய வேண்டும். புகாரளிப்பதில் தாமதம் செய்ய வேண்டாம். முந்துவதே சிறந்தது!

ஆர்பிஜ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**



அதிக வருமானத்தை எதிர்பார்ப்பது அதிக ஆபத்தை ஏற்படுத்துகிறது. எனவே, எந்த விரைவான மற்றும் அதிக வருவாய் திட்டத்தால் ஈர்க்கப்பட வேண்டாம். உங்கள் பணத்தை புத்திசாலித்தனமாக முதலீடு செய்யுங்கள்.

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**



எந்தவொரு திட்டத்திலும் பணத்தை வைப்பதற்கு முன், திட்டத்தை முழுமையாக சரிபார்க்கவும். விரைவான மற்றும் அதிக வருவாயை உறுதியளிக்கும் வகையில், ஒழுங்குபடுத்தப்படாத நிறுவன சலுகைகளால் ஈர்க்கப்பட வேண்டாம். இது ஒரு மோசடியாக இருக்கலாம்.

ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**

எந்தவொரு திட்டத்தின் கீழும் டெபாசிட் செய்யப்பட்ட பணத்தை திருப்பித் தராத எந்தவொரு நிறுவனத்திற்கும் எதிராக புகார் இருந்தால், நீங்கள் ஆர்பிஐ யின் ‘சசேத்’ போர்ட்டலில் புகார் அளிக்கலாம். ஆர்பிஐ சொல்கிறது - விழிப்புடன் இருங்கள், எச்சரிக்கையாக இருங்கள்.

**RBI Kehta Hai...**
**Jaankaar Baniye,**
**Satark Rahiye!**

